# கருஞ்சட்டைத் தமிழர்

மாதம் இருமுறை

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

● மலர்:6 இதழ்: 22 ● திருவள்ளுவர் ஆண்டு 2048 ● சனவரி 16-31, 2017 ● விலை:ரூ.5 ● Volume:6 Issue:12 ● January 16-31, 2017 ● Price:Rs.5



04.01.2017 அன்று, தி.மு.கழகப் பொதுக்குழுவில் தளபதி மு.க.ஸ்டாலின், கட்சியின் செயல் தலைவராக நியமிக்கப்பட்டார்.

## புலிக்குப் பிறந்த புலியே வருக!

கழகத் தொண்டனே காலில் விழாதே
அழகிய சுயமரி யாதை உன்வழி

என்றே சொல்லிப் பயணம் தொடங்கினாய்
அன்றே தமிழகம் அறிந்ததுன் பெருமை!

புயலின் வேகம் புதுமைத் தாகம்
செயலின் தலைவா சிறந்துநீ வாழ்க!

உழைப்பு ஈன்ற உழைப்பே வருக!
புலிக்குப் பிறந்த புலியே வருக!!

- சுபவீ

## பொங்கல் விடுமுறை

# பா.ஜ.க. ஆடிய ஒருநாள் கூத்து!

**சுப.வீரபாண்டியன்**

எத்தனை எத்தனை 'வியாக்கியானங்கள்!'. தந்தி தொலைக்காட்சி பாண்டே உள்பட எத்தனை பொழிப்புரையாளர்கள்! தமிழினத்திற்கு எதிரான தங்கள் போக்கை மறைத்துக் கொள்ள எவ்வளவு நாடகங்கள்! எல்லாம் 24 மணி நேரத்தில் வெட்ட வெளிச்சமாகி விட்டன.

மத்திய அரசின் ஊழியர் ஒருங்கிணைப்புக் குழுதான் எல்லாவற்றையும் முடிவு செய்கிறதாம். கட்டாய விடுமுறைகள் எவை, விருப்ப விடுமுறைகள் எவை என்பதை அவர்கள்தாம் தீர்மானிப்பார்களாம். மத்திய அரசு அதில் தலையிட முடியாதாம். அப்படியானால், இப்போது எப்படித் தலையிட்டு முடிவெடுத்தார்கள்? கிராமங்களில் சொல்லுவார்கள் 'மெதுவாக வாலை விட்டுப் பார்ப்பது, அடி விழுந்தால் சுருட்டிக் கொள்வது" என்று.



எது கட்டாய விடுமுறை (ஆண்டுக்கு 14 நாள்கள்). எது விருப்ப விடுமுறை (3 நாள்கள்) என்பதை ஒரு அதிகாரிகளின் குழு முடிவு செய்கிறது என்பது சரிதான். ஆனால் அந்தக் குழுவில் யார் இருக்கின்றார்கள்? மத்திய அரசின் முதல் நிலை அதிகாரிகள்தான் (Class I officers) அந்தக் குழு உறுப்பினர்கள். அவர்கள் யாராக இருப்பார்கள் என்று சின்னக் குழந்தைக்குக் கூடத் தெரியுமே! சமூகத்தில் நூற்றுக்கு 3 பேராக இருக்கும் பார்ப்பனர்கள்தானே முதல் நிலை அதிகாரிகளாக 97% இருப்பார்கள். அவர்கள் அப்படித்தானே முடிவெடுப்பார்கள்!

அரசு இதிலெல்லாம் தலையிடுவதில்லை என்பது நம்பமுடியாத நாடகம். ஒருவேளை, தீபாவளியை விருப்ப விடுமுறையாக அவர்கள்

தொடர்ச்சி 2ஆம் பக்கம்..

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

நிர்வாக ஆசிரியர்கள்
**சிற்பி செல்வராஜ்**
**கி.செந்தில்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

அச்சில் உதவி
**அ.சாதிக் பாட்சா**
**ஜெம் கிராபிக்ஸ்**

இணையதளம்
**www.keertru.com**

சுபவீ வலைப்பூ
**www.subavee.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**


1ஆம் பக்கத் தொடர்ச்சி...

*முடிவு செய்தால் மத்திய அரசு மௌனமாக இருந்து விடுமா?*

*மத்திய அரசின் கவனத்திற்கு வரவில்லை என்பதும் உண்மையன்று. பட்டியல் வெளியானவுடனேயே, அனைத்திந்திய மத்திய அரசு ஊழியர்கள் பெருங்கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் துரைப்பாண்டியன் 28.12.2016 அன்றே, இது குறித்து மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியுள்ளார். பிரதமருக்கும், மத்திய அரசின் ஊழியர் நலத் துறை இணையமைச்சர் சர்மாவிற்கும் கடிதங்கள் சென்றுள்ளன. அப்போதெல்லாம் அரசுக்குக் கேளாக் காதாக இருந்தது.*

*ஜனவரி 9ஆம் தேதி மாலை, தி.மு.க.வின் செயல் தலைவர் தளபதி ஸ்டாலின் கண்டன ஆர்ப்பாட்ட அறிவிப்பைக் கொடுத்த பின்னும், தமிழகத்தின் பல்வேறு கட்சிகள் தங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்த பின்னும்தான் மத்திய அரசு அசைந்தது. 24 மணி நேரத்திற்குள்ளாகத் தங்களின் முடிவை மாற்றிக் கொண்டனர்.*

*தமிழ், தமிழ்ப் பண்பாடு ஆகியனவற்றிற்கு எதிராக வாலை நுழைத்துப் பார்க்கும் வேலையை இனிமேலாவது பா.ஜ.க நிறுத்திக் கொள்ள வேண்டும். இல்லையேல் தமிழ்நாட்டில் அரசியல் நடத்தும் தகுதியை அக்கட்சி இழந்துவிடும்..* ●



22.01.2007ஆம் ஆண்டு, சென்னை கலைவாணர் அரங்கில், **இனமானப் பேராசிரியர் க.அன்பழகன்** அவர்களால் தொடக்கி வைக்கப்பெற்ற

**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

10 ஆண்டுகளை நிறைவு செய்து

**11 ஆம் ஆண்டில்**

அடியெடுத்து வைக்கிறது.
பேரவையின் சமூகநீதிப் பயணம் தொடர்கிறது.

**தொடரும்...**

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

**கருஞ்சட்டைத் தமிழர்**

# மின்சாரம் மரணத்தின் அறிகுறி

10 லட்ச ரூபாய்க்குக் கோட்டுப் போட்டுக்கொள்வதும், ஊர் சுற்றுவதும், நாடாளுமன்றத்தில் முக்கிய விவாதங்களில் கலந்துகொள்ளப் பயந்து ஒதுங்குவதுமாக உள்ள ஒருவர் இந்தியாவின் பிரதமர்.

நாட்டை முன்னேற்றப்போகிறேன் என்று சொல்லிக்கொண்டு இவரால் நாட்டு மக்கள் அடையும் இன்னல்கள் சொல்லி மாளாது.

குறிப்பாக, தமிழகத்தின் நிலை படுமோசமாகிக் கொண்டு இருக்கிறது.

கடந்த 9ஆம் தேதி முதல்வர் ஓ.பன்னீர்ச்செல்வத்தின் அனுமதியுடன் மின் துறை அமைச்சர் தங்கமணி முன்னிலையில் டெல்லியில் ‘உதய்’ என்ற திட்டத்திற்கு அனுமதி வழங்கிக் கையெழுத்து இட்டு இருக்கிறார்கள் அதிகாரிகள்.

டிசம்பர் 5ஆம் தேதி மறைவுற்ற முதல்வர் ஜெயலலிதா, தான் மறையும் வரை இத்திட்டத்தை எதிர்த்தார்.

இன்றைய அரசு மோடிக்கு ‘ஜால்ரா’ தட்டிக்கொண்டு இத்திட்டத்தை ஏற்றுக்கொண்டுள்ளது.

உதய் என்ற இத்திட்டத்தின் படி மின்கட்டணம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மாற்றி அமைக்கப்படும். அதாவது மாறுதல் என்ற பெயரில் திணிக்கும் கட்டண உயர்வு இது.

இத்திட்டத்தில் செலவில் 75 விழுக்காடு தமிழக அரசு ஏற்க வேண்டும். 25 விழுக்காடு பாண்டு மூலம் வங்கியில் செலுத்த வேண்டும்.

இதனால் தமிழக அரசுக்கு கடும் நிதிச் சுமை ஏற்படும்.

உதய் திட்டத்தால் இலவச மின்சாரம் நிறுத்தப்படும். இதனால் விவசாயம், குடிசைப்பகுதி மக்களின் நிலை கடும் பாதிப்புக்கு உள்ளாகும்.

இதுவரை அரசிடம் இருந்த மின்வாரியம், மக்களின் தேவைக்காக மின்சாரம் வழங்கி வந்தது.

உதய் திட்டத்தால் மின்வாரியம் கார்பரேட் பெரு முதலாளியிடம் போய்விடும். ஆகவே இனி மின்சாரம் இலாப நோக்கம் கருதும் வணிகமாக மாறிவிடும்.

இப்பொழுது இருக்கும் 57 விழுக்காடு மின்சார கட்டணம் இனி தாறுமாறாக ஏறிக்கொண்டே போகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இதுவரை மின்தடை அல்லது கோளாறு ஏற்பட்டால் அரசின் மின்வாரியத்தில் சொல்லிச் சரிசெய்யலாம்.

உதய் திட்டத்தால் தனியார் மயமாகும் போது யாரிடம் முறையிடுவது, எப்படிச் சரிசெய்வது?

இரயில்வே, சேலம் இரும்பாலை, ஊட்டி படச்சுருள் நிறுவனம், வங்கி என்று அரசு நிறுவனங்களைத் தனியாருக்குத் தாரைவாத்து விடத் துடிக்கும், பாசிச பா.ஜ.க மோடி அரசு மின்சாரத்தையும் கார்பரேட் பெரு முதலாளிகளிடம் ஒப்படைத்துவிடத் துடித்துக் கொண்டிருக்கிறது.

இதற்கு அ.தி.மு.க அரசும் துணை போய்விட்டது.

மக்களுக்காக அரசு என்பது மாறி, அரசுக்காக மக்கள் என்ற நிலை இன்று உறுவாக்கப்பட்டு விட்டது.

மின்சாரத்தைத் தொட்டால் மரணம்.

மத்திய மாநில அரசுகள் இப்பொழுது மின்சாரத்தில் கைவைத்து விட்டன.

விளைவு...

மக்கள் காண்பிக்கத்தான் போகிறார்கள்...

# ஏன் வேண்டும் இட ஒதுக்கீடு?

**இனியன்**

இன்னும் எத்தனை காலத்திற்குத்தான் இட ஒதுக்கீடு கேட்பீர்கள் என்று சலித்துக் கொள்பவர்கள் உண்டு. அவர்களில் எவர் ஒருவரும், இன்னும் எத்தனை காலத்திற்குத்தான் சாதி இந்த நாட்டில் இருக்கும் என்று சலித்துக் கொள்வதில்லை.

இட ஒதுக்கீடு முறையினால்தான் தகுதியும், திறமையும் உள்ள எங்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்று புலம்பு கின்றவர்களையும் நாம் பார்க்கிறோம். ஆனால் உண்மை நிலையோ முற்றிலும் வேறாக உள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா, அண்மையில் அம்பத்தூரில் நடைபெற்ற கூட்டமொன்றில், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட ஒரு புள்ளி விவரத்தைப் படித்துக் காட்டினார். இந்தியாவில் உள்ள 19 பொதுத்துறை வங்கிகளில் பொது மேலாளர்களாகப் பணியாற்றுவோரில் எத்தனை சதவீதம் பிற்படுத்தப்பட்டோர், எத்தனை சதவீதம் தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் உள்ளனர் என்பதை அச்செய்தி கூறுகின்றது.

அதே போல, சென்னையில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்தில் (ஐ.ஐ.டி) பணியாற்றும் பேராசிரியர்களின் நிலையும் எவ்வாறுள்ளது என்பதை நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

அருகில் உள்ள புள்ளி விவரத்தின்படி, வங்கிகளில் பணியாற்றும் 436 பொது மேலாளர்களில் 410 பேர் முன்னேறிய சாதியினராக உள்ளனர். ஐ.ஐ.டி நிலையும் அதுதான். இந்தியாவின் சமூக நீதியின் நிலை இது.

| Category | Assistant Professor | Associate Professor | Professor | Total |
|---|---|---|---|---|
| SC | 4 | 4 | 3 | 11 |
| ST | 1 | 1 | 0 | 2 |
| OBC | 20 | 17 | 22 | 59 |
| General | 152 | 99 | 213 | 464 |
| **Total** | **177** | **121** | **238** | **536** |

| | GENERAL MANAGER | | | |
|---|---|---|---|---|
| NATIONALISED BANKS | TOTAL | OBC | SC | ST |
| 1. Allahabad Bank | 19 | 0 | 0 | 0 |
| 2. Andhra Bank | 16 | 0 | 0 | 0 |
| 3. Bank of Baroda | 44 | 1 | 1 | 0 |
| 4. Bank of India | 37 | 0 | 1 | 1 |
| 5. Bank of Maharashtra | 11 | 0 | 0 | 0 |
| 6. Canara Bank | 42 | 0 | 2 | 0 |
| 7. Central Bank of India | 27 | 0 | 1 | 0 |
| 8. Corporation Bank | 20 | 0 | 0 | 0 |
| 9. Dena Bank | 13 | 0 | 0 | 1 |
| 10. Indian Bank | 18 | 3 | 1 | 0 |
| 11. Indian Overseas Bank | 26 | 0 | 1 | 2 |
| 12. Oriental Bank of Commerce | 21 | 0 | 0 | 0 |
| 13. Punjab & Sind Bank | 12 | 0 | 0 | 0 |
| 14. Punjab National Bank | 42 | 0 | 1 | 1 |
| 15. Syndicate Bank | 25 | 0 | 4 | 0 |
| 16. UCO Bank | 21 | 0 | 1 | 0 |
| 17. Union Bank of India | 29 | 1 | 1 | 1 |
| 18. United Bank of India | 13 | 0 | 0 | 1 |
| 19. Vijaya Bank | * | - | - | - |
| **TOTAL** | **436** | **5** | **14** | **7** |
| **Percentage** | | **1.1%** | **3.2%** | **1.6%** |

Source: Collected thro' RTI ACT, 2005

2017
சனவரி
16–31

## சுபவீ சுற்றுப்பயண விவரம்



| | | | |
|---|---|---|---|
| ஜனவரி 16 | மாலை 5 மணி | சென்னை, புத்தகக் கண்காட்சி | நூல் வெளியீட்டு விழா |
| ஜனவரி 18 | மாலை 6 மணி | சென்னை, ஆர்.கே.நகர் | நீதிக்கட்சி நூற்றாண்டு விழா |
| ஜனவரி 19 | மாலை 6 மணி | சென்னை, பெரியார் திடல் | நூல் வெளியீட்டு விழா |
| ஜனவரி 21 | மாலை 6 மணி | சென்னை, கொளத்தூர் | நூல் வெளியீட்டு விழா |
| ஜனவரி 22 | மாலை 6 மணி | சென்னை, பம்மல் | இலக்கிய மன்ற ஆண்டு விழா |
| ஜனவரி 24 | மாலை 6 மணி | கல்பாக்கம் | பொங்கல் விழா |
| ஜனவரி 25 | மாலை 6 மணி | சென்னை, ஆலந்தூர் | மொழிப்போர் வீரர்கள் நினைவுநாள் கூட்டம் |
| ஜனவரி 28 | இரவு 9 மணி | கபிஸ்தலம் | மக்கள் கலை விழா |
| ஜனவரி 29 | காலை 10 மணி | சேலம் | அக்குபஞ்சர் மருத்துவர்கள் மாநாடு |
| ஜனவரி 29 | மாலை 6 மணி | பொள்ளாச்சி | தி.மு.க. பொதுக்கூட்டம் |
| ஜனவரி 31 | மாலை 6 மணி | வேலூர் | சிங்காராயர் மகன் திருமண வரவேற்பு |

# மந்திரிக்கு அழகு மண்சோறு தின்பதா?



பொள்ளாச்சி மா.உமாபதி

உலகில் பெரிதும் வஞ்சிக்கப்பட்டது ஈழத்தமிழினம். அதுபோல இன்றைக்கு பெரிதும் வஞ்சிக்கப்பட்டு இருப்பவர்கள் தமிழக விவசாயிகள்.

ஈழத்தமிழர்களின் நியாயமான விடுதலைப் போராட்டத்தை இயல்பாகவே இந்தியா ஆதரித்து இருக்கவேண்டும். ஈழத்தமிழர்களின் தொப்புள்கொடி உறவுகளான தமிழர்கள் வாழும் இந்தியா ஆதரிக்கவில்லை என்பதைவிட, அது எதிராக நின்றது.

இந்தியாவின் பகை நாடான பாகிஸ்தானாவது இந்தியாவுக்கு எதிரான நிலை எடுத்ததா என்றால், இல்லை.

இந்தியாவின் எதிரியான சீனாவாவது இந்தியாவின் நிலைக்கு எதிரான முடிவு எடுத்ததா என்றால், அதுவுமில்லை. சீனாவின் எதிரி நாடான அமெரிக்காவாவது தமிழர்களுக்கு ஆதரவாக வந்ததா என்றால் அதுவுமில்லை. ரஷ்யாவாவது அமெரிக்கவுக்கு எதிரான நிலை எடுத்ததா என்றால், அதுவும் ஈழத்தமிழர்களுக்கு எதிராகவே இருந்தது.

ஆக உலக நாடுகள் அனைத்தும் ஒன்றாகச் சேர்ந்து ஈழத்தமிழர்களின் போராட்டத்தை வஞ்சித்தன, நசுக்கின.

அதுபோலவே இன்றைக்குத் தமிழக விவசாயிகளை மத்திய அரசு, மாநில அரசு, அண்டை மாநில அரசுகள், இயற்கை, மழை, இந்திய அரசியல், பொருளாதாரம் என்று அனைத்தும் வஞ்சித்து வருகின்றன.

வரலாற்றுக் காலம் முதல் காவிரி நீரில் தமிழ் நாட்டுக்கு உரிமை இருக்கிறது.

தமிழகத்திற்கு உரிமையுள்ள நீரைத் தராமல் கர்நாடக அரசு வஞ்சித்து வருகிறது.

உரிய காலத்தில் மழை பெய்யாமல் இயற்கையும் வஞ்சிக்கிறது.

காவிரி நீரைத் தமிழகத்திற்கு நியாயமாகப் பெற்றுத்தராமல், மத்திய அரசும் வஞ்சிக்கிறது. இப்படித் தமிழக விவசாயிகள் அனைவராலும், அனைத்து நிலைகளிலும் வஞ்சிக்கப்பட்டு வருகின்றனர்.

தமிழகத்திற்கு உரிமையுள்ள நீரைக் கர்நாடக அரசு தராமல் மறுத்து வந்ததால், 1990இல் தமிழக முதல்வர் கலைஞரின் வேண்டுகோளை ஏற்று அன்றைய பிரதமர், சமூக நீதிக் காவலர் வி.பி.சிங் அவர்கள் நடுவர் மன்றத்தை நிறுவினார்.

அந்த நடுவர் மன்றம் நீண்ட நெடிய விசாரணைக்குப் பிறகு, காவிரி நீரில் தமிழகத்திற்கு உரிய பங்கினை நிர்ணயித்துத்

தீர்ப்பு வழங்கியது.

கர்நாடக அரசு அத்தீர்ப்பினை மதித்து தமிழகத்திற்கு உரிய பங்கினை வழங்காததால், தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தை நாடியது.

உச்சநீதி மன்றமும் நியாயப்படியும், சட்டப்படியும் தமிழகத்திற்கு வழங்கவேண்டிய நீரைக் கர்நாடக அரசு வழங்கவேண்டும் என்றும் "வாழு, வாழவிடு" என்னும் தத்துவத்தின் படி நடந்துகொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தியது. அத்தோடு நீர்ப் பங்கினைக் கண்காணிக்க 'காவிரி மேலாண்மை வாரியத்தை' அமைக்க மத்திய அரசுக்கு ஆணையிட்டது.

முதலில் அதற்கு ஒத்துக்கொண்டது மத்திய அரசு. பின்னர் சொத்தையான காரணங்களைக் கூறி அதைத் தள்ளிப்போட்டு வருகிறது.

மத்தியில் ஆளும் பா.ஜ.க. அரசைப் பொறுத்தவரையில், தமிழ் நாட்டில் அவர்கள் தலைகீழாய் நின்றாலும் தேர்தலில் கட்டுத் தொகையைக் கூட பெறமுடியாது என்பது அதற்குத் தெரியும்.

அதே சமயம் கர்நாடகத்தில் உரிய கூட்டணி அமைத்துப் போராடினால் ஆட்சியைக் கூட பிடிக்க முடியும் என்ற அரசியல் நோக்கம் கருதி கர்நாடகத்திற்குச் சார்பாக நடந்து வருகிறது.

காவிரி நீர் கிடைக்காவிட்டாலும், வடகிழக்குப் பருவ மழை கைகொடுக்கும் என்று காவிரி டெல்டா விவசாயிகள் பெரிதும் நம்பினார்கள்.

ஆனால் இம்முறையும் இயற்கை அவர்களை வஞ்சித்து விட்டது. போதிய மழையின்றிப் பயிர்கள் கருகிவிட்டன. விவசாயிகள் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்ததுடன், இந்தச் சம்பா போகத்திற்கு இடுபொருள் செலவுகளுக்காகக் கடன் வாங்கிச் செய்த செலவும் வீணாகியது கண்டு மனம் உடைந்து போயுள்ளனர்.

வருமானத்தை இழந்ததுடன் கடன்காரர்களுக்கு என்ன பதில் சொல்வது என்பதை அறியாமல் மனம் கொதித்து, நெஞ்சதிர்ச்சியாலும், மனம் உடைந்து, நஞ்சு அருந்தியும் மரணத்தைத் தழுவிவருகின்றனர்.

அவ்வாறு மரணம் அடைந்தவர்களின் எண்ணிக்கை 200ஐ நெருங்கிக் கொண்டுள்ளது.

விவசாயிகளின் இத்துயரச் சூழ்நிலையை உணர்ந்து, ஓடோடிச் சென்று அவர்களின் துயரைத் துடைக்க வேண்டிய கடமை தமிழக முதல்வருக்கும், அமைசரவைக்கும் உள்ளது. ஆனால் கடந்த செப்டம்பர் மாதத்தில் அன்றைய முதலமைச்சர் அம்மையார் ஜெயலலிதா உடல்நலமின்றி அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அவரின் மந்திரிப் பிரதானிகள் அனைவரும் மக்களை மறந்து தங்கள் தலைவிக்காக பிராத்தனை, யாகம், வேள்வி, அலகு குத்தல், அங்கப்பிரதட்சணம், தேர் இழுத்தல், மண் பிரியாணி சாப்பிடுதல் என்று காலம் கடத்தினார்களே அன்றி, தமிழக விவசாயிகளை திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

அம்மையார் ஜெயலலிதா காலமானபின்னர் திரு ஓ.பன்னீர்செல்வம் மூன்றாவது முறையாக முதல்வர் பொறுப்பை ஏற்றார்.

ஆனால் அவர் பதவி ஏற்றது முதல், திருமதி சசிகலாவை முதல்வராக்க வேண்டும் என்ற கோரிக்கையோடு அவருக்குக் கீழ் பணியாற்றும் அமைச்சர்கள் வலம் வருகின்றனரே அன்றி, விவசாயிகளின் கோரிக்கைகளுக்குச் சற்றும் இடமளிப்பதாகத் தெரியவில்லை.

காவிரியும் மழையும் பொய்த்ததால்தான் மனம் உடைந்து மரணத்தைத் தழுவிய விவசாயிகளின் எண்ணிக்கை 100ஐக் கடந்து போய்க்கொண்டு



இருப்பதைக் கண்டு, விவசாயிகளின் குறை கேட்க அமைச்சர்கள் இப்போது செல்கின்றனர்.

மழை பொய்த்த காரணத்தைக் கூறி மத்திய அரசிடம் கோரிக்கை வைத்துக் கர்நாடக, கேரள அரசுகள் நிவாரண நிதியைப் பெற்றுக்கொண்டனர். ஆனால் தமிழக அரசும் அமைச்சர்களும் தமிழகத்தில் விவசாயிகள் விவசாயம் பொய்த்ததால் இறந்துள்ளதைப் பதிவு செய்யாததாலும், முறையாகக் கோரிக்கை வைக்காததாலும் நிவாரணத் தொகையைப் பெற விடாமல் வீணடித்து வருகின்றனர்.

கொள்கை கோட்பாடுகளை, இலக்கியங்களை ஏற்று, பொது நலத்தோடு அரசியலில் பங்கேற்று தேர்தலில் போட்டியிட்டு சட்டமன்ற உறுப்பினர்களாகி அமைச்சர்களாகியிருந்தால் அவர்களுக்கு மக்களைக் காக்க வேண்டிய எண்ணமும், அக்கறையும் இருந்து இருக்கும்.

இவர்கள் காலஞ்சென்ற அம்மாவின் விசுவாசிகளாக, அடிமைகளாக, நல்ல நேரம், நல்ல காலம், ஜாதகப் பலன்களைப் பார்த்து, காசு பணத்தைக் காட்டி சட்டமன்ற உறுப்பினர் அமைச்சர்களானவர்களிடம் சுய நலத்தைத் தவிர வேறு எதை எதிர்பார்க்க முடியும்.

இவர்களுக்கு "சொன்னாலும் புரியாது மண்ணாளும் வித்தை".

காவிரி நீர் முழுவதையும் தானே வைத்துக் கொண்ட கர்நாடக அரசு, மழை பெய்ய வில்லை என்று கூறி, வறட்சி மாநிலமாக அறிவித்து மத்திய அரசிடம் ரூபாய் 1200 கோடி நிவாரணத் தொகை வாங்குகிறது.

தண்ணீர் பெற முடியாமல், மாநிலத்தில் வறட்சி என்று மத்திய அரசிடம் அறிவிக்காமல், நிவாரணங்களைப் பெற்று விவசாயிகளுக்கு உதவத் திராணியற்றதாகத் தமிழக அரசு விளங்குகிறது.

இதைவிடக் கொடுமை, விவசாயிகளைப் பார்த்துக் குறைகேட்கச்சென்ற அ.தி.மு.க. அமைச்சர்கள் இறந்து போன விவசாயிகள் எல்லாம் முதுமையால் இறந்ததாகவும், குடும்பப் பிரச்சனைகளால் இறந்துபோனதாகவும் சொல்லி வெந்த புண்ணில் வேல்பாய்ச்சி வருகின்றனர்.

தி.மு.கழகத்தின் செயல் தலைவரும், தமிழகச் சட்டமன்ற எதிர்கட்சித் தலைவருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் கவுரவம் பார்க்காமல் முதலமைச்சர் பன்னீர்ச்செல்வம் அவர்களைச் சந்தித்து உடனடியாகத் தமிழகத்தை வறட்சி மாநிலமாக அறிவிக்கவும், சட்டமன்றத்தைக் கூட்டித் தீர்மானங்கள் நிறைவேற்றி மத்திய அரசை நிவாரணத் தொகை வழங்க வலியுறுத்தவும், அறிவுறுத்தியுள்ளார்.

இவ்வாறு வலியுறுத்த தி.மு.கழகத்திற்கு முழுத் தகுதி இருக்கிறது.

விவசாயிகள் தங்கள் விளை பொருள்களுக்குத் தாங்களே விலை நிர்ணயிக்கவும், கடைக்கோடிக் கிராமங்களில் இருந்து சுமைகூலியின்றிக் காய்கறிகளை நகர்புறங்களில் கொண்டு வந்து விற்பனை செய்யவும் உழவர் சந்தைத் திட்டத்தை கொண்டு வந்தது தி.மு.கழக அரசு.

இந்தியாவிலேயே விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கிய முதல் மாநிலம் தமிழகம் என்ற பெருமையைத்தக்கது தி.மு.கழக ஆட்சி.

விவசாயிகளின் கழுத்தை நெரித்த கடன் தொகை ரூபாய் 7000 கோடியைத் தள்ளுபடி செய்தது கலைஞர் அரசு.

அந்த அனுபவங்களின் அடிப்படையின் எதிர்க்கட்சித் தலைவரின் கோரிக்கையினை ஏற்றுத் தமிழக அரசு –

- உடனடியாகச் சட்டமன்றத்தைக் கூட்டி விவாதித்து மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து நிவாரணத் தொகை பெற வேண்டும்.
- மரணமடைந்த விவசாயிகளின் குடும்பங்களுக்குக் கணிசமான இழப்பீடு வழங்கவேண்டும்.
- விவசாயம் பொய்த்துக் காய்ந்துபோன பயிர்களுக்கு உரிய இழப்பீட்டினை வழங்க வேண்டும்.
- தமிழகத்தை வறட்சி மாநிலமாக அறிவிக்க வேண்டும்.
- வேலையின்றித் தவிக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்குக் குளம், குட்டைகள், ஏரிகள், கண்மாய்கள், பாசன வாய்க்கால்களைத் தூர்வாரி, ஆழப்படுத்தி சீர்படுத்தும் வேலைகளைத் தர வேண்டும். இதனால் அவர்களுக்கு ஓரளவு வருமானம் கிடைப்பதுடன் அடுத்து மழை பொழியும் போது, மழையைச் சேகரிக்கவும் முடியும்.

ஆவன செய்யுமா அ.தி.மு.க அரசு.

●




சிவதி

## 5 கூகுள் டாக்ஸ் (Google Docs)

மைக்ரோ சாப்ட் Word, நமக்கெல்லாம் பழகிய அமைப்பு. எது தட்டச்சு செய்து அச்சு எடுத்தாலும் Ms word அன்றி வேறொன்று நினைத்துக்கூடப் பார்க்க இயலாததாகி விட்டது. இருப்பினும் அதற்கு இணையான அல்லது மேம்பட்ட வசதியினை கூகுள் டாக்ஸ் வழங்குகிறது.

அப்படி என்னதான் கூகுள் டாக்ஸ்–ல் இருக்கிறது என்று பார்த்தால் ஏராளம்.

கணினியில் நாம் ஜி–மெயில் பார்க்கும் போது நமது விவரப்படத்திற்கு அருகில் கூகுள் செயலிகள் இருப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அதில் Google Doc என தேர்வு செய்தால் நமக்கு Ms word போன்ற பகுதி திறக்கும்.

இதில் நீங்கள் கடிதம், குறிப்பு, விவரங்கள், கோப்புகள் என Ms word™ எதுவெல்லாம் செய்கிறீர்களோ அதுவெல்லாம் செய்ய முடியும்.

அது சரி... ஏற்கனவேதான் Ms word இருக்கிறது. அதைவிட இதில் என்ன சிறப்பம்சம் என நீங்கள் கேட்கலாம். Ms word ஐ நீங்கள் விலை கொடுத்து வாங்குகிறீர்கள். ஆனால் இந்த கூகுள் செயலி விலையில்லாமல் கிடைக்கிறது. அதுமட்டுமல்ல – இன்னும் நிறையவே இருக்கிறது. இதைச் செயலியாக மொபைல் போனில் தரவிறக்கம் செய்து கணினியில் என்ன தட்டச்சு செய்தீர்களோ அதை மொபைலில் காணலாம், திருத்தங்களும், Edit–ம் செய்யலாம்.

இதை அப்படியே உங்கள் நண்பருக்கும் பகிரலாம். அதனை அவரும் திருத்த முடியும். நான்கைந்து பேர் சேர்ந்து செய்யும் ஒரு திட்ட அறிக்கையினை ஒரே ஆவணமாகப் பாதுகாக்க இந்த செயலி அதிகமாகவே உதவும்.

ஒவ்வொரு ஆவணத்தையும் பாதுகாக்க நாம் ஒவ்வொருமுறையும் பென் ட்ரைவை தூக்கிக்கொண்டு அலையத்தேவையில்லை. Print, Share, Copy, Paste, Edit என அனைத்தும் செய்ய முடியும்; உங்கள் கைகளிலேயே அந்த



ஆவணத்தை எப்போது வேண்டுமானாலும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள முடியும்.

இந்தக் கோப்பை அப்படியே Ms word ஆக சேமிக்கக்கூடிய வசதியும் உள்ளது. இந்த Google Docs ஐ ஆன்லைன் மட்டுமல்ல ஆப் லைனிலும் நீங்கள் பயன்படுத்த முடியும் என்பதால் எவ்விதத் தடையுமில்லை. இவ்வகையான கோப்பை அப்படியே அனுப்ப வேண்டிய தேவை கூட இல்லை. நீங்கள் இதனை Link Address ஆகக் கூட வாட்ஸ்ஆப், டெலிகிராம், குறுஞ்செய்தி என வெகு எளிதாக அனுப்ப முடியும்.

Google Play Store சென்று Docs என தட்டச்சு செய்யுங்கள்–போதுமானது. இல்லை எனில் இவ்விணைப்பை சொடுக்குங்கள். அதுவுமே போதுமானது.

https://play.google.com/store/apps/details?id=com.google.android.apps.docs.editors.docs

## 6 விக்கிபீடியா (Wikipedia)




தேடல்தானே வாழ்க்கை; தேடிக்கொண்டே இருக்கிறோம். நமக்கு தேடியது கிடைத்துவிட்டால் கூட நாம் ஒருபோதும் தேடுவதை நிறுத்துவதில்லை. அது போலவே நமக்கு எது பற்றி விவரம் வேண்டுமோ உடனடியாக கணினி முன் உட்கார்ந்து தட்டுகிறோம். கணினியில் இல்லை என்றால் இவ்வுலகத்திலேயே அது பற்றி இல்லை என்ற முடிவிற்கும் வந்து விடுகிறோம்.

கணினி சென்று கூகுளில் எதை வேண்டுமானாலும் தேடுங்கள். உங்களுக்கு முதலில் கிடைப்பது விக்கிபீடியாவில் இருந்துதான். அப்படி என்னதான் இருக்கிறது விக்கிபீடியாவில். விக்கிபீடியாவில் எல்லாம் இருக்கிறது. எது இல்லை எனக் கருதுகிறீர்களோ அதை நீங்கள் உருவாக்க முடியும்.

ஆம். விக்கிபயனராக நீங்கள் இணைந்தால் விக்கியில் நீங்கள் கட்டுரைகளை உருவாக்க முடியும், திருத்த முடியும், மேம்படுத்த முடியும். அது ஓர் அறிவு சார்ந்த கட்டற்ற கலைக் களஞ்சியம்.

Google Play Store செல்லுங்கள், பிறகு Wikipedia என தட்டச்சு செய்து செயலியைத் தரவிறக்கம் செய்யுங்கள். இப்போது திறந்து பயன்படுத்துங்கள். உண்மையில் உலகத்தின் ஒட்டுமொத்த தகவலும் இப்போது உங்கள் உள்ளங்கைக்குள் வந்துவிட்டது.

உங்களுக்குத் தெரியாதவற்றைத் தேடி அறிந்து கொள்ளுங்கள். தெரிந்தவற்றை தொகுத்து கட்டுரையாக்குங்கள். உங்களுக்கு உதவ உலகம் முழுக்க விக்கி தன்னார்வலர்கள் உள்ளனர். அதுமட்டுமல்ல விக்னரியில் சொற்களை உருவாக்கலாம். சொற்களுக்கு ஒளிவடிவம் அளிக்கலாம். நீங்கள் எடுத்த படங்களைச் சேர்க்கலாம். ஒளிக்காட்சிகளை தக்க தலைப்புகளுடன் சேர்க்கலாம். மேலும் எண்ணற்ற கோப்புகள் அதில் உள்ளன. அதனை வாசித்து அறியலாம். திருத்தமும் செய்யலாம்.

திறன்பேசி என்றாலே நாம் பெரும்பாலும் ஒளி–ஒலிக்காட்சிகளில் திளைத்துவிடுகிறோம். அல்லது சமூக ஊடகத்திற்குள் தொலைந்து போகிறோம். விக்கியின் பக்கம் நம் கவனம் திசை திரும்புமானால் அந்த நொடிப்பொழுதின் புள்ளியில் இருந்து வளர்ச்சியின் பாதை நோக்கிப் பயணிக்கிறோம் என்று பொருள்.

பயனரின் பெயரைத் தமிழிலேயே உருவாக்க முடியும். நீங்கள் தொகுக்கும் கட்டுரையின் வரலாற்றில் உங்கள் பெயர் இடம் பெற்றும் இருக்கும். உங்கள் தொடர் பங்களிப்பின் மூலம் உங்களுக்கான அடுத்தடுத்த விருதுகளை விக்கியே வழங்கும். உண்மையில் அறிவுசார்ந்த பயணமிது.

உங்களைப்பற்றி உங்கள் அறிமுகத்தை இனி உங்கள் முகவரி அட்டை (Visiting Card) மூலமாகத் தெரிவிக்காதீர். விக்கியில் உங்கள் பங்களிப்பின் மூலம் தெரிவியுங்கள். அது மொழிக்கும் நல்லது. நமது சுயமரியாதைக்கும் நல்லது.

உலகம் அறிவால் ஆளப்படட்டும்

https://play.google.com/store/apps/details?id=org.wikipedia இணைப்பு வழியாகவும் தரவிறக்கம் செய்யலாம்.

●

## மறக்க முடியுமா?

# மயிலை சீனி. வேங்கடசாமி



**எழில்.இளங்கோவன்**

சில நாள்களுக்கு முன்னர், மயிலை சீனி.வேங்கடசாமி அவர்களைப் பற்றித் தோழர் சுப.வீரபாண்டியன் அவர்கள் தன் ஒரு நிமிட செய்தியில் நினைவு கூர்ந்தார். தமிழுலகம் மறக்கக் கூடாத அறிஞர்களுள் மயிலையாரும் ஒருவர்.

மயிலை சீனிவேங்கடசாமி 1900ஆவது ஆண்டு டிசம்பர் 16ஆம் நாள் சென்னை மயிலாப்பூரில் பிறந்தார்.

இவரின் கல்வி 10ஆம் வகுப்பு வரைதான். பின்னர் இடைநிலை ஆசிரியாரகவே பணிபுரிந்து ஓய்வு பெற்ற இவர் திருமணம் செய்துகொள்ளவில்லை.

படித்தது பத்தாம் வகுப்பு என்றாலும், பல்கலைக்கழகப் பேராசிரியர்களுக்கு இணையாக இவர் ஆய்வுப் பேரறிஞராகத் திகழ்ந்தார்.

இவர் நீதிக்கட்சிக் காலத்தில் வெளிவந்த ‘திராவிடன்’, பெரியாரின் ‘குடிஅரசு’ ஆகிய இதழ்களில் ஆசிரியர் குழுவில் இடம் பெற்றும், கட்டுரைகள் எழுதியும் வந்தார்.

“வேதம், புராணம், கடவுள், கோயில், விதி, வினை என்று சொல்லிக்கொண்டு நாளுக்கு நாள் முட்டாள்களாகிக் கொண்டிருக்கும் வழக்கத்தை விட்டுவிட்டு எந்த விசயத்தையும் பகுத்தறிவு கொண்டு ஆராயும் படி கேட்டுக்கொள்கிறேன்” என்று குடிஅரசு இதழில் எழுதிய பகுத்தறிவாளர் இவர்.

கல்வெட்டு, நாணயவியல், பிராமி, கிரந்தம், தமிழ், கன்னடம், மலையாளம் என்று இவரின் ஆய்வுகளின் விளைவாக, பௌத்தமும் தமிழும் – சமணமும் தமிழும் – கிருஸ்தவமும் தமிழும் – பௌத்த கதைகள் – புத்த ஜாதகக் கதைகள் – மகாபலிபுரத்து ஜைன சிற்பங்கள் – நரசிம்மவர்மன் – மூன்றாம் நரசிம்மன் – மகேந்திரவர்மனின் ‘மத்தவிலாசம்’ (தமிழ் மொழிபெயர்ப்பு) – களப்பிரர் ஆட்சியில் தமிழகம் – கொங்கு நாட்டு வரலாறு – துளுவநாட்டு வரலாறு– சங்ககால வரலாற்றில் சில செய்திகள் – சங்ககால சேர, சோழ, பாண்டியர் – சேரன் செங்குட்டுவன் – கல்வெட்டெழுத்துகள் – இறையனார் களவியலுரை ஆராய்ச்சி போன்ற முப்பதுக்கும் மேற்பட்ட நூல்கள் எழுதியிருக்கிறார்.

தொல்காப்பியர் காலத்தால் பிற்பட்டவர் என்று வாதிட்டார் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை.

அவரின் வாதத்தை முற்றிலும் நிராகரித்தார் மயிலையார். பிராமி எழுத்து வருவதற்கு முன்பே தமிழ் எழுத்து வழக்கில் இருந்ததைச் சான்றுகளுடன் நிறுவி காலத்தால் முற்பட்டவர் தொல்காப்பியர் என்றார்.

களப்பிரர்கள் காலத்தை இருண்ட காலம் எனப் பலர் கூறுகிறார்கள். இதை ஏற்றுக்கொள்ள மறுக்கும் மயிலையார் –

தமிழ் பிராமி (தமிழி) எழுத்திலிருந்து தமிழ் வட்டெழுத்து வடிவம் பெற்றது களப்பிரர் காலத்தில்.

இதுவே சோழ, பல்லவர் காலத்துக்குப் பின்னர் இன்றைய நவீன வடிவத் தமிழ் எழுத்துக்கு அடிப்படை என்றார்.

திருக்குறள், கார்நாற்பது, களவழி நாற்பது, திரிகடுகம், ஏலாதி, இனியவை நாற்பது, சீவக சிந்தாமணி, முதுமொழிக்காஞ்சி, விளக்கத்தார் கூத்து, நரிவிருத்தம், எலிவிருத்தம், முத்தொள்ளாயிரம் போன்ற இலக்கியங்களும்,

அபிநயம், நத்தத்தம், பல்காயம், பல்காப்பியம், காக்கைப் பாடிணியம் போன்ற இலக்கண நூல்களும் களப்பிரர் காலத்தவை என்றார்.

முன்னர் இருந்த வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய பா வகைகள் தாழிசை, விருத்தம், துறை என்று விரிவுபெற்றதும் களப்பிரர் காலத்தில் என்று விளக்கினார்.

பார்பனர்களிடமிருந்து இறையிலி நிலங்கள் பிடுங்கப்பட்ட சமணர்களின் காலமே களப்பிரர்களின் ஒளிமிக்க காலம் என்று உறுதிபடக் கூறினார்.

நரசிம்மவர்மன் காலத்தில் உருவாக்கப்பட்ட மாமல்லபுரப் பாறைச் சிற்பங்களில் ஒன்றைப் பாரதக் கதையின் அர்ஜுனன் தபசு என்றும், இராமாயணத்தின் பகீரதன் தபசு என்றும் இருவேறு கதைகளைக் சொல்வார்கள்.

அந்த கதைகளைத் தவறானவை என்று தன் ஆய்வின் மூலம் மறுத்துரைக்கும் மயிலையார், உரிய சான்றுகளுடன் அச்சிற்பங்கள் இரண்டாம் சமணத் தீர்த்தங்கரர் அஜிதநாதரின் புராணத்தில் வரும் சகர சக்கரவர்த்தியின் சமண கதைச்சிற்பங்கள் என்பதை உறுதி செய்கிறார்.

இன்றைய காஞ்சிபுரம், கி.பி. 2ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் பௌத்தர்களின் காஞ்சி மாநகராக இருந்தது. சீத்தலைச்சாத்தனாரின் பௌத்த காப்பியமான ‘மணிமேகலை’யின் காப்பியத் தலைவி மணிமேகலை இறந்தது காஞ்சியில்.

அதனால் அன்று காஞ்சியில் இருந்த பௌத்த ஆலயமான தாராதேவி ஆலயத்தில் மணிமேகலையின் உருவச்சிலை வைக்கப்பட்டது.

அன்றைய பௌத்த தாராதேவி ஆலயம் இன்று காஞ்சி காமாட்சியம்மன் கோயிலாக ஆக்கப்பட்டு விட்டது. அதனுள் இருந்த மணிமேகலை சிலை இன்று அன்னபூரணி இன்று இந்து தெய்வமாக மாற்றப்பட்டு விட்டது.

அன்று மணிமேகலை, சம்பாபதி, தாராதேவி ஆகிய பௌத்த சிறு தெய்வங்கள், இன்று காளி, பிடாரி, திரௌபதி அம்மன் ஆகிய பெயர்களில் இந்து தெய்வங்களாக மாற்றிவிட்டார்கள் என்ற வரலாற்று உண்மைகளைத் தன் ஆய்வின் மூலம் பதிவு செய்கிறார் மயிலை சீனி.வேங்கடசாமி.

சோழர்கள் காலத்தில் நிலவிய தேவரடியார் என்ற கொடுமையான பெண்ணடிமைத் தனத்தை, அதனை ஊக்கப்படுத்தி வளர்த்த பார்ப்பனர்கள் சோழர்கள் குறித்து நாம் அறிவோம்.

முதலாம் குலோத்துங்கன்: இவன், செயங்கொண்டார் எழுதிய ‘கலிங்கத்துப்பரணி’யின் தலைவன்.

இவனின் 29ஆம் ஆட்சியாண்டின் சாசனங்களில் சோழர் கோயில்களில் தேவரடியார் பெண்கள் விலைக்கு விற்கப்பட்டுள்ளார்கள் என்ற செய்தி பதிவாகி இருக்கிறது.

இதனைச் சுட்டிக்காட்டும் மயிலை சீனி.வேங்கடசாமி, 1926இல் இவர் எழுதிய கட்டுரைகளில் பெண் கல்வி, கைம்பெண் மறுமணம், குழந்தைத் திருமண ஒழிப்பு ஆகியவைகளைப் பற்றி விரிவாக எழுதினாலும், தேவரடியார் குறித்த அவரின் பதிவு விரிவாக இல்லை என்பது வியப்பாக இருக்கிறது.

1950 காலகட்டங்களில் இவரின் தீவிர ஆய்வுகளைத் தொடர்ந்து ஏறத்தாழ முப்பது நூல்களும் திராவிடன், குடிஅரசு, செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப்பொழில், ஆராய்ச்சி, ஊழியன், இலட்சுமி போன்ற இதழ்களில் ஏராளமான ஆய்வுகட்டுரைகளும் எழுதியிருக்கிறார்.

இவரின் நூல்கள் அனைத்தும் இன்று நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளன.

1963–64 இவ்விரு ஆண்டுகளில், சென்னை தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார்.

“கோயில்களில் நடைபெறும் திருப்பாவாடை நிகழ்வை ஆய்ந்து, அது ஓர் இனிப்புப் பண்டம் என்று விளக்குகிறார் மயிலை சீனி.வேங்கடசாமி. அத்தரி என்னும் கோவேறு கழுதையைப்பற்றி சொல்லாய்வு செய்துமிருக்கிறார். கந்தி, கவுந்தி என்பன அருகக் கடவுளைத் தொழும் சமணப்பெண் துறவிகள் என்றார். அவ்வை என்ற சொல் வயது முதிர்ந்த பெண்ணைக் குறிப்பதாகச் சொல்லும் இவர், அவ்வை ஏன் இளமையில் கிழவியானாள் என்பதை விளக்க முற்படவில்லை” இப்படிப் பகுத்தறிவு ஆய்வாளராக மு.சிவகுருநாதனால் புகழப்படும் மயிலை சீனி.வேங்கடசாமியை –

**தமிழையே வணிக மாக்கி**
**தன்வீடும் மக்கள் சுற்றம்**
**தமிழிலே பிழைப்ப தற்கு**
**தலைமுறை தலைமு றைக்கும்**
**தமிழ்முத லாக்கிக் கொண்ட**
**பல்கலைத் தலைவன் எல்லாம்**
**தமிழ்சீ னிவேங்க டத்தின்**
**கால்தூ சும்பெறா றென்பேன்!**

– என்று போற்றிப் பாடுகிறார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள். ஆய்வுப் பேரறிஞர் மயிலை சீனி.வேங்கடசாமி அவர்கள் 1981ஆம் ஆண்டு மே திங்கள் 8ஆம் நாள் தன் ஆய்வை நிறுத்தி, மரணத்தின் மூலம் ஓய்வு எடுத்துக் கொண்டார்.

Karunchattai Tamilar. Date of Publication 12th and 28th of Every Month.
Registered with Registrar of News paper for India No: TN TAM/2009/32719, Post Regd No: TN/CH(C)/427/2016-18,
Licenced to post WPP No: TN/PMG(CCR)WPP - 206/2016-18




# பக்தி இலக்கிய வெள்ளத்திற்குத் தடை போட்ட பெரியார்!

**கீற்று நந்தன்**

பழந்தமிழ் இலக்கியங்கள் மீதான பெரியாரின் பார்வையை 'கொஞ்சம்கூட கரிசனை இல்லாத முரட்டு அடி' என்று சொல்வார்கள். பேராசிரியர் இரா.மணியன் எழுதியுள்ள 'பெரியாரின் இலக்கியச் சிந்தனைகள்' நூலை வாசிக்கும்போது, அது உண்மைதான் என்பதை உணர முடிகிறது. ஆனால், நாடெங்கும் கம்பராமாயண, பெரிய புராண கதாகாலட்சேபங்கள் நடந்து கொண்டிருந்த சூழலில், புராணப் புரட்டுகளில் மக்கள் மயங்கிக் கிடந்த வேளையில், பெரியார் ஓங்கித்தான் அடிக்க வேண்டியிருந்தது. அந்த முரட்டு அடிதான், வெள்ளமென வெளிவந்து கொண்டிருந்த பக்தி இலக்கியங்களுக்குத் தடை போட்டது.

பெரியாரின் வருகைக்கு முன்பு வந்த பக்தி இலக்கியங்களின் என்ணிக்கையையும், அதன்பின்பு வந்த பக்தி இலக்கியங்களின் எண்ணிக்கையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இது பளிச்சென விளங்கும். இன்று பக்தி இலக்கியம் எழுதும் வகைமையே ஒழிந்து விட்டது. ஜெயமோகன், பாலகுமாரன் போன்ற இந்துத்துவ எழுத்தாளர்கள் மட்டுமே அங்கொன்றும், இங்கொன்றுமாக எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அதுவும் பழைய கதைகளை புதிய அட்டையில் போட்டுத் தருகிறார்களே ஒழிய, புதிதாக ஒன்றையும் பெரியளவில் படைக்கக் காணோம். கவிதை இலக்கியங்களில் நவீன பக்தி இலக்கியங்கள் சுத்தமாக இல்லாது போய்விட்டது. இதுதான் பெரியாரின் முரட்டு அடிக்குக் கிடைத்த வெற்றி.



பெரியாரின் இலக்கியச் சிந்தனைகள்
ஆசிரியர்:
பேராசிரியர் முனைவர் இரா. மணியன்
வெளியீடு:
புரட்சிப்பாதைப் பதிப்பகம்
10, சவகர்லால் நேரு சாலை,
கோயம்பேடு, சென்னை-70.
பக்கங்கள் 197, விலை. ரூ.60

அதே பெரியார்தான், "திருவள்ளுவர் கூறியுள்ள கருத்துக்களுள் ஒன்றேனும் ஒழுக்கக் குறைபாடுள்ளதாகக் காணப்படாது. அறிவுள்ளவர் யாரும் மறுக்க முடியாத வெறுக்க முடியாத கருத்துகளை அமைத்துத்தான் அவர் குறளை இயற்றியுள்ளார். குறளை ஊன்றிப் படிப்பவர்கள் எல்லோரும் நிச்சயம் சுயமரியாதை உணர்ச்சி பெறுவார்கள். அரசியல் ஞானம், சமூக ஞானம், பொருளாதார ஞானம் ஆகிய சகலமும் அதில் அடங்கிவிடுகிறது." என்றும்,

"ஒவ்வொருவனும் , 'நான் இந்துவல்ல; திராவிடனே திருக்குறள் விரும்பியே' என்று கூறிக்கொள்வதில் பெருமை அடைய வேண்டும்; விபூதியையும், நாமத்தையும் விட்டொழிக்க வேண்டும்; புராணங்களைப் படிக்கக்கூடாது. 'நீ என்ன மதம்?' என்றால் 'குறள் மதம்', 'மனித தர்ம மதம்' என்று சொல்லப் பழக வேண்டும்." என்றும் சொல்லி இருக்கிறார் (விடுதலை 5.11.1948)

பகுத்தறிவுக்கு ஒவ்வாத, மூடநம்பிக்கைகளை வளர்க்கும் இலக்கியங்களை பெரியார் விமர்சித்தபோதும், அதன் உச்சமாக கம்பராமாயணத்தைக் கொளுத்தச் சொன்னபோதும், அவருக்கு எதிராகக் களம் இறங்கியவர்கள் இடதுசாரியான ஜீவாவும், தமிழ்த் தேசியவாதியான ம.பொ.சிவஞானமும். ஊர் ஊராகப் போய், கம்பன் விழாக்களில் கலந்துகொண்டு கம்பராமாயணத்தைத் தூக்கிப் பிடித்தார் ஜீவா. பெரியாரை 'வறட்டு நாத்திகவாதி' என்று அன்றைய இடதுசாரிகள் விமர்சித்தார்கள். ம.பொ.சி., காரண காரியம் இல்லாமல் சுயவிளம்பரத்திற்காக பெரியார் இதைச் செய்கிறார் என்றும், நாட்டில் நடைமுறையில் இருக்கும் நல்லதெற்கெல்லாம் அவர் எதிரி என்றும் கடுமையாகச் சாடினார்.

காலத்தின் போக்கில் எது நிலைத்து நின்றது? இன்று கம்பராமாயணச் சொற்பொழிவுகளை ஆற்ற இடதுசாரிகள் மரபில் யாருமில்லை. பக்தி இலக்கியங்களில் மிகுந்திருக்கும் இலக்கிய நுட்பத்தைப் பேசுவதற்கு தமிழ்த் தேசியவாதிகள் யாரும் இன்றைக்குத் தயாராக இல்லை.

பெரியார் பேசியதையும், எழுதியதையும் மட்டுமே வைத்துக் கொண்டு பெரியாரியலை நாம் குறுக்கி விடக்கூடாது. சமகாலத்துப் பிரச்சினைகளை பெரியாரின் பகுத்தறிவுக் கண்ணாடி கொண்டு பார்த்து, பெரியாரியலை விரிவுபடுத்த வேண்டும்.

உதாரணத்திற்கு ஒன்றை எடுத்துக் கொள்வோம் சிறுதெய்வ வழிபாடு.

இது 'நாட்டார் வழிபாடு' என்று இடதுசாரி அமைப்புகளால் விதந்தோதப்படுகிறது. சிறுதெய்வ வழிபாடு, பெரியாரியலுக்கு எதிரானது அல்ல என்றும், பெருந்தெய்வங்களை விமர்சித்த பெரியார் இவற்றை விமர்சிக்கவே இல்லை என்றும் ஆய்வாளர் தொ.பரமசிவன் கூறுகிறார். ஆனால், உண்மை என்பது அப்படித்தானா?

பெரியார் 'கடவுள் இல்லை' என்றுதான் சொன்னார். இந்து மதக் கடவுள்கள் மட்டும் இல்லை என்று அவர் கூறவில்லை. முஸ்லிம், கிறித்துவம் என அனைத்து மதக்கடவுள்களையும் இல்லை என்றுதான் அவர் நிராகரித்தார். அவற்றில் சிறுதெய்வங்களும் விதிவிலக்கில்லை.

நல்ல புத்தகம் என்பது அப்புத்தகத்தில் சொல்லப்பட்டவற்றையும் தாண்டி, நம்மை சிந்திக்க வைக்க வேண்டும். அந்த வகையில் பார்த்தால், பேராசிரியர் இரா.மணியன் எழுதியுள்ள 'பெரியாரின் இலக்கியச் சிந்தனைகள்' மிக நல்ல புத்தகம்.

இன்றைக்கும் இலக்கியச் சுவைக்காக கம்பராமாயணத்தையும், சிலப்பதிகாரத்தையும் கொண்டாடுவதில் தவறென்ன என்று கேட்கும் முற்போக்காளர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் படிக்க வேண்டிய புத்தகம் இது. வியாபார நோக்கம் இல்லாமல், மக்களிடம் திராவிடக் கொள்கைகள் போய்ச் சேர வேண்டும் என்ற நோக்கில் பதிப்பித்து இருக்கும் திருச்சி கே.சௌந்தரராசன் அய்யாவிற்குப் பாராட்டுகள்.

படித்தும், பகுத்தறிவற்றவர்களாய் நம் மக்கள் வாழும் நிலையில் அவர்களிடம் நாம் அறிமுகப்படுத்த வேண்டியது முற்போக்கு இலக்கியங்களையும், பகுத்தறிவு ஊட்டும் நூல்களையும்தான் என்பதைக் கருத்தில் கொள்வோம்; அவற்றையே தூக்கிப் பிடிப்போம்.

Tamil Fortnightly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP
Posted: 17 January 2017

பெறுநர்/To

திரு

அனுப்புநர்/From
கருஞ்சட்டைத் தமிழர்
122/130, என்.டி.ஆர். தெரு,
ரங்கராசபுரம், கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
பேச : 044 - 42047162

Karunchattai Tamilar
122/130, N.T.R. St.,
Rengarajapuram, Kodambakkam,
Chennai - 600 024.

Owned and published by G. Dinakaran, From 7/8, Peters Colony, Rayapettah, Chennai - 14, and Printed by R.B. Anandababu at Cosmic Printers, 12 Oil Monger Street, Triplicane, Chennai -5. Editor : Suba. Veerapandian